சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 156/2016

2023 ம் ஆண்டு **06.10.2023** ம் தேதி கருப்புச்சாமி

என்பவரின் சாட்சியாகிய மசா 3 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற இளநிலை உதவியாளர் திரு.எம்.குமரலிங்கம் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருப்புச்சாமி | தாலூக்கா | பொள்ளாச்சி |
| க.பெ. (அ) த.பெ. | ரங்கன் | சமயம் | இந்து |
| கிராமம் | நல்லுத்துக்குளி | வயது | 59 |

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பு ஆவணங்களாக

16.மசாஆ 16 – எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது),

எனவே எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்து போன முரளியின் ஓட்டுனர் உரிமத்தை நான் பார்த்தது இல்லை.

அவருக்கு சொந்தமான ஆட்டோ இருந்தது என்பதற்கு பதிவு சான்றை பார்த்ததில்லை என்றால் பார்த்துள்ளேன். அவர் வைத்திருந்த வண்டியின் பதிவு எண் ஞாபகம் இல்லை. அவர் மாதா மாதம் ரூ.30,000/– சம்பாதித்ததற்கு கணக்கு வழக்கு பார்த்ததில்லை. அவர் வாடகைக்கு வண்டி ஓட்டவில்லை என்றாலும சொந்தமாக வண்டி வைத்திருக்கவில்லை என்றாலும் நான் சொல்வதுபோல் மாதாமாதம் ரூ.30000/– சம்பாதிக்கவில்லை என்றாலும சரியல்ல. இழப்பீடு அதிகம் பெற்றுத்தரவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி